னேன். அங்கே ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. குறிப்பாக, சொல்லப் போனால், அந்த ஆராய்ச்சியின் பயனை கண்டறிந்த பின், அதைப்பற்றி விஸ்தரிப்பது பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, பாக்கின் விலை இப்போது மிகவும் குறைவாக இருக்கிறது. அதோடு பாக்கைப் பொறுத்தவரையில், வருமான வரிக்கு 1 ஏக்கருக்கு 6 ஏக்கர் (ஸ்டாண்டர்டு ஏக்கர்) வைத்து இருக் கிறோம். ஆகவே, பாக்கு உற்பத்தி பாதிக்கப்பட்டு இருக்கிறது. அரசு பாக்கு உற்பத்தியை இன்னும் விரிவுபடுத்தும் முறையில் விவசாய வரு மான வரியிலிருந்து விலக்கு கொடுப்பதற்கு................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வியை யாரிடத்தில் போடுவது என்பது இல்லையா? பாக்கு என்ற உடனேயே எல்லாவற்றை யும் குறித்து கேட்டு விடுவதா?

திரு. ஜே. ஜேம்ஸ்: ஆகவே, பாக்கு உற்பத்தியை விஸ்தரிக்கும் முறையில், இந்த இடற்பாடுகளையெல்லாம் அகற்ற அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: பாக்கு விலை குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். இப்போது குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். எப்போது குறைந்தது என்ற விவரம் என் கைவசம் இப்போது இல்லை. ஆனால் பாக்கு உற்பத்தியை விஸ்தரிக்க வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது.

திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, பெத்துநாயக்கன்பாளை யத்திலும், ஆத்தூரிலும் பாக்கு மரங்கள் காய்ந்து விட்டதால், அங்கே பாக்கு மரங்களை பயிர் செய்ய சிறப்புத் திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: பெத்துநாயக்கன்பாளையத்தில் காய்ந்து விட்டதாகச் சொல்கிறார்கள். அது பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை. அங்கே 10,27,000 மரங்கள் இப்போது இருக்கின்றன என்று எனக்குத் தகவல் இருக்கிறது.

திரு. மு. பழனிவேலன்: தலைவரவர்களே, என்னுடைய தொகுதி பெத்துநாயக்கன்பாளையம் தொகுதியாகும். அங்கே ஏராளமான அளவில் பாக்கு மரங்கள் இந்த கடுமையான வறட்சியால் காய்ந்து சாய்ந்து விட்டன. அப்படிப்பட்ட இடத்திற்கு சிறப்பு ஏற்பாடு செய்து, தண்ணீர் கொடுப்பதற்கு ஏதாவது அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இது ஆராய்ச்சி பற்றிய வினா. தண்ணீர் கொடுப்பது பற்றி சம்பந்தப்பட்ட துறைக்கு நான் தெரிவிக்கிறேன்.

திரு. கோவை. செழியன்: பேரவைத் தலைவரவர்களே, பங்களா தேஷ் ஏற்பட்ட பிறகு, பங்களா தேஷிலிருந்து ஏராளமான பாக்கு